# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.287/2025.
Prosecution witness for P.W. 14.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ராஜாமணி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.07.2026.

முதல் விசாரணை

நான் தற்போது விருதுநகர் மாவட்டம் சிவகாசி உட்கோட்டம் மாறநேரி காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 27.08.2013 அன்று சிப்காட் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 15 மணியளவில் தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து வந்த கடித எண். C.No.A1/35027/2013-ன் படி எங்கள் நிலையத்திற்கு அனுப்பப்பட்ட வழக்கு கோப்பை பெற்று நிலைய குற்ற எண் 264/2013 இதச 147, 148, 302, 201, 506(2) பிரிவுகள் படி வழக்கு பதிவுசெய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 19**. அதை தூத்துக்குடி நீதித்துறை நடுவர் எண் 1க்கு அனுப்பினேன். அதன் நகல்களை தகுந்த உயர் அதிகாரிகளுக்கும், ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.07.08 19:20:22 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.287/2025.
Prosecution witness for P.W. 15.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. குமரேசன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.07.2026.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் பொருளாதார குற்றப்பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு தாளமுத்துநகர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது 26.08.2013 அன்று அ.சா.12 பதிவு செய்திருந்த வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடமான கமாக் பள்ளி பின்புறமாக KSPS நிறுவனத்திற்கு சொந்தமான இடத்தில் சாட்சிகள் மணிகண்டன், அ.சா.5 ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரித்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே குறியீடுசெய்யப்பட்ட அ.சா.ஆ 3. அந்த வரைபடம் **அ.சா.ஆ 20**. காலை சுமார் 10 மணியளவில் சம்பவ இடத்தில் அதே சாட்சிகள் முன்னிலையில் முழுவதும் எரிந்த நிலையில் கழுத்து மட்டும் எரியாத நிலையில் இருந்த சிகப்பு நிற டீ சர்ட்டின் மூன்று துண்டுகள், முழுவதும் எரிந்த நிலையில் இருந்த சிகப்பு நிற ஜட்டியின் பின்பகுதியும், அதோடு ஒட்டியுள்ள ஜீன்ஸ் பேண்ட்டின் பகுதியும் அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே குறியீடுசெய்யப்பட்ட

அ.சா.ஆ 5. அந்த உடைகள் ஏற்கனவே குறியீடுசெய்யப்பட்ட சா.பொ. 8 மற்றும் 9. அந்த உடைகளில் சீனி ஒட்டியிருந்தது. பிறகு அதே சாட்சிகளை அழைத்துக் கொண்டு ஓம்சாந்தி நகரில் 2ம் எதிரி வீட்டிற்கு அழைத்துச் சென்று அங்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் அதே சாட்சிகள் முன்னிலையில் தயாரித்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே குறியீடுசெய்யப்பட்ட அ.சா.ஆ 2. மேற்படி வரைபடம் **அ.சா.ஆ 21**. மேற்படி சம்பவ இடத்தில் இருந்த ரத்தம்பட்ட மற்றும் ரத்தம்படாத தரை ஓடுகள், ஆரஞ்சு, பச்சை, வெள்ளை நிறமுள்ள ரத்தம்படிந்த திரைச்சீலை, ரத்தக்கறை படிந்த காக்கி நிற பேண்ட், ரத்தக்கறை படிந்த வெள்ளை நிற முழுக்கை சட்டை, ரத்தக்கறை படிந்த கிழிந்த காட்டன் துண்டு, ரத்தக்கறை படிந்த காட்டன் துண்டு ஆகியவற்றை மகஜரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே குறியீடுசெய்யப்பட்ட அ.சா.ஆ 4. மேற்படி வழக்கு சொத்துக்கள் ஏற்கனவே குறியீடுசெய்யப்பட்ட சா.பொ. 1 முதல் 7. அத்துடன் சம்பவ இடமான கமாக் பள்ளி அருகில் உள்ள KSPS நிறுவனத்தின் இடத்தில் பகல் 11.30 மணி முதல் 13.30 மணி வரையில் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து அறிக்கை தயாரித்தேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ 22**. பிரேத விசாரணையின்போது சாட்சிகள் அ.சா.1, அ.சா.2, ரமேஷ், அ.சா.3, அ.சா.4 ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 13.30 மணியளவில் சம்பவ இடத்திற்கு வந்து பிரேத பரிசோதனை செய்ய அ.சா.11 மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் ஆசீர்வாதம் என்ற தலைமைக் காவலர் மூலம் கொடுத்தேன். மருத்துவர் மேற்படி இடத்திற்கு வந்து பிரேத பரிசோதனை முடித்த பின்னர் பிரேதம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சாட்சிகள் மணிகண்டன், அ.சா.5, ஆசீர்வாதம், அ.சா.9, அ.சா.8 கிராம நிர்வாக

அலுவலர், அ.சா.12 ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். வழக்கு சொத்துக்களை நீதிமன்றத்திற்கு படிவம் 91ன் மூலம் அனுப்பினேன். என் விசாரணையில் சம்பவ இடம் சிப்காட் காவல்நிலைய எல்லைக்குட்பட்டது என்று தெரியவந்ததால் 27.08.2013 அன்று வழக்கு கோப்பை சிப்காட் காவல்நிலையத்திற்கு அனுப்பினேன்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.07.08 19:20:40 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.